<u>**மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.**</u>

<u>**அசல் வழக்கு எண்.276/2019**</u>

முன்னிலை – பா.சரவணன், பி.எஸ்ஸி., பி.எல்.,
மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 17 ஆம் நாள் புதன் கிழமை வாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969ம் ஆண்டு 54 விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.V.மகேஸ்வரி, இருக்கை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முத்துசாமி | தந்தை பெயர் | : | நடேசன் |
| ஜாதி | : | | கிராமம் | : | |
| வட்டம் | : | | மதம் | : | |
| தொழில் | : | | வயது | : | |

நாள் : 17.06.2026

**P.W. : 1**

<u>**வாதிகள் தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி**</u>

நான் 2ம் வாதி ஆவேன். 08.07.2019 அன்று 1ம் வாதி மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பிய விண்ணப்பம் மற்றும் அதற்கான அஞ்சலக இரசீது **வா.சா.ஆ.7** வரிசையாகும். அதை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை **வா.சா.ஆ.8** ஆகும். 11.07.2019 தேதியில் பிரதிவாதி அனந்தலட்சுமி பெயரில் ஏற்பட்ட கிரைய பத்திரம் ஆவண எண்.2534/2019ன் பதிவு நகல் **வா.சா.ஆ.9** ஆகும். 11.07.2019 தேதியில்

பிரதிவாதி அனந்தலட்சுமி பெயரில் ஏற்பட்ட கிரைய பத்திரம் ஆவண எண்.2533/2019 ன் பதிவு நகல் **வா.சா.ஆ.10** ஆகும். தாவாப்படி தீர்ப்பாக வேண்டும்.

*(27.03.2026 தேதியில் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த குறிப்பாணையின் அடிப்படையில் வா.சா.ஆ.1 உயில், பிரதிவாதி தரப்பு ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்யப்பட்டது).*

**(வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி.
திருச்சிராப்பள்ளி.